

அஸோஸியேடட் ப்ரொடக்ஷன்ஸ்

# அம்மா

144

சென்னையில் இப்பொழுது நடைபெறுகிறது

சித்ரா, கிருஷ்ணா, சயானி

# “அம்மா”

தினசரி மூன்று காட்சிகள்

அஸோஸியேட்டட் ப்ரொடெக்ஷன்ஸாரின்

# அம்மா

*நடிகர்கள்*

| | | |
|---|---|---|
| திக்குருசி | ... | *வேணு* |
| M. N. நம்பியார் | ... | *மோகன்* |
| T. S. துரைராஜ் | ... | *கேசவன்* |
| K. ராமசாமி | ... | *பிரபாகரன்* |
| D. பாலசுப்ரமணியம் | ... | *டாக்டர் தம்பி* |
| K. W. கோபாலன் நாயர் | ... | *பாங்கர்* |
| முத்தையா | ... | *வேலு* |

T. V. K. சர்மா, V. T. கல்யாணம்,
பாலன், A. K. சேட். etc.,

*நடிகைகள்*

| | | |
|---|---|---|
| லலிதா | ... | *ராதா* |
| B. S. சரோஜா | ... | *சாரதா* |
| சாந்தகுமாரி | ... | *லக்ஷ்மி அம்மா* |
| C. R. லக்ஷ்மிதேவி | ... | *நாணி* |
| சாந்தகுமாரி (Jr,) | ... | *சியாமளா* |

*இசை நாடகம்:* "வாசவதத்தா"

*நடிப்பவர்கள் :*

லலிதா, பத்மினி, இந்திரா ஆச்சாரியர், தங்கம் etc.,

*பின்னணிப் பாட்டு*

P. லீலா, ஜிக்கி, கண்டசாலா, கோபாலன், ஜானம்மா டேவிட்

*ஸ்டுடியோ*

**வாஹினி**

*டைரெக்ஷன்*

**K. வேம்பு**

# அம்மா

## கதைச் சுருக்கம்

பாலக்காட்டுக்கு அருகிலுள்ள கல்பாத்தி கிராமத்தில் வசித்துவந்த லக்ஷ்மி அம்மாளுக்கு வேணு என்ற மகனும் சாரதா என்ற மகளும் இருக்கிறார்கள். குழந்தைகளின் சிறு பிராயத்திலேயே கணவனை இழந்த லக்ஷ்மி அம்மாள் தன் நகைகளை விற்றும், கணவன் வைத்துப்போன ஒரே வீட்டை அடமானம் வைத்தும் குழந்தைகளை வளர்த்து மகனையும் காலேஜ்வரை படிக்க வைக்கிறாள். இந்த கஷ்ட காலங்களில் அவளுக்கு உற்றதுணையாக இருந்து ஊழியம் புரிந்து வந்தவர்கள் வீட்டு வேலைக்காரன் கேசவனும் அவன் மனைவியுந்தான்.

காலேஜில் படிக்கும் வேணு தன்னுடன் படித்துக் கொண்டிருந்த ராதை என்ற பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறான். ராதையின் தகப்பனார் பிரபல டாக்டர். வேணுவின் வற்புறுத்தலின் மேல் பெண் கேட்கச் சென்ற லக்ஷ்மி அம்மாளை டாக்டர் கேவலமாகப் பேசவே, டாக்டருக்கும் அவர் மகளுக்கும் வார்த்தை வலுத்து ராதை தகப்பனைத் துறந்து லக்ஷ்மி அம்மாளுடன் கல்பாத்தி சென்று வேணுவை மணக்கிறாள். படாடோபத்தில் வாழ்ந்த ராதைக்கு கிராம வாழ்க்கை வேப்பங்காயாகி விடுகிறது. வேணுவுக்கு சென்னையில் ஒரு பாங்கியில் அகௌண்டெண்ட் வேலை கிடைக்கவே அவன் மனைவியை அழைத்துச் சென்று சென்னையில் குடித்தனம் நடத்துகிறான்.

நாட்டுப்பெண் படாடோபத்துக்கே பிள்ளையின் சம்பாத்தியம் போதாதிருக்க லக்ஷ்மி அம்மாளுக்கு வேணு எப்படி பணம் அனுப்புவான்? லக்ஷ்மி அம்மாளை கடன்காரர்கள் பிடுங்கித் தின்கிறார்கள். இறுதியில் வீட்டையும் ஏலம் போட்டு விடுகிறார்கள். லக்ஷ்மி அம்மாள்

தன் பெண் சாரதாவுடன் பிள்ளையிருக்குமிடம் வந்து சேருகிருள். மாமியும் நாத்தியும் வந்தது மருமகளின் உல்லாச வாழ்க்கைக்குப் பெரிய இடைஞ்சலாகிறது. இதனுல் குடும்பத்தில் குழப்பம் ஏற்படுகிறது. இந்தக்காலத்தில் வேணுவின் நண்பனும் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுமான பிரபாகரனும் அவன் மனைவி சாமளாவும் லக்ஷ்மி அம்மாளுக்கு உதவியாயிருக்கிருர்கள்.

மருமகளின் சுடு சொற்களைத் தாங்கமாட்டாமல், வேணு ஊரிலில்லாத சமயம், லக்ஷ்மி அம்மாள் பெண்ணை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பிச் செல்கிருள். வழியில் கார்விபத்துக்குள்ளாகி, காரை மோதிய மோகனனுடைய வீட்டில் தாயும் மகளும் வசிக்கிருர்கள். மோகன் தகப்பனுர் ஒரு பாங்கர். அங்கு மோகனனுக்கும் சாரதாவுக்கும் காதல் ஏற்படுகிறது.

பாங்க் காரியமாக வெளியூர் சென்றிருந்த வேணு சென்னை வந்ததும் தன் தாயார் காணுமற்போன தகவலை அறிந்து மனைவியைக் கடிந்து தாயாரைத் தேடி அலைகிருன். அதுசமயம் அவன் வீட்டில் வைத்துப்போன பாங்க் பணத்தில் 3,000 ரூபாயை எடுத்து ராதை தன் கடன்களைத் தீர்க்கிருள். பாங்க் பணத்தைக் கையாடிய குற்றத்திற்காக வேணு ஜெயிலில் தள்ளப்படுகிருன். இதைப்பற்றி பாங்கரும் மோகனும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்ட லக்ஷ்மி அம்மாள் துடிதுடித்து ஒரு பெரிய தியாகத்துக்குத் தயாராகிருள். அது என்ன தியாகம்? அதன் முடிவு என்ன? அம்மாவின் கதி என்ன?

—:o:—

# அம்மா

## பாடல்கள்

(1) சாரதா :

பல்லவி

அம்மாவே தெய்வம் உலகினிலே
அம்மாவே தெய்வம் உலகினிலே—உற்ற
துணையாகுமே எவர்க்கும் இவ்வாழ்விலே. (அ)

அநுபல்லவி

எவ்வுயிர்க்கும் முதல் சொல் அம்மா
எவ்வுயிர்க்கும் முதல் சொல் அம்மா—நம்
எதிர் நின்று பேசுந் தெய்வம் அம்மா : பிச்சை
எடுப்பார்களும் சொல்வாரே அம்மா, (அ)

சரணம்

இவ்வடிவம் எனக்கு நீ, தந்தாய் அம்மா
இவ்வடிவம் எனக்கு நீ, தந்தாய் அம்மா
இதுபோலவே இனி நாகவே
இதுபோலவே ஆனி நாகவே
எடுத்துரைப்பார் யார்
எனக்கேதான் அம்மா. (அ)

[ அம்மா ]

(2) கோரஸ்

பல்லவி

அனைவருமே வருவீர்
அனைவருமே வருவீர்
வாலிபம் போனால்
வாழ்வினில் இன்பமும் வருமோ. (அ)

அநுபல்லவி

கேட்பார் யார் நம்மை
நாமே ராஜா
ஆஸ்டலில் நமக்குத்
தமாஷாம். (அ)

சரணம்

படிக்கிறோமென்று
தந்தையிடமிருந்து
பணமது வருதே நாளே
... ... ...
...
...
பாஸோ இல்லை யோ
நாமும் ஷோக் கா
பிக்னிக்கு போய் வருவோமே. (அ)

(3) வேணு & ராதா

ஜலஸா ஹைலஸா ஹைலஸா ஹை
படகே நமது துணையே
இதற்கு இணையே
உலகினிலே இல்லையே
... ... ...
ஜலஸா ... ... ஹை.
மெள்ள மெள்ளப் போகுதே—தென்றல்
அள்ளியெங்கும் வீசுதே
... ... ...
... ... ...
தள்ளிவந்தோம் தூரமே அங்கு
துள்ளும் மீனைப் பாருமே.
இயற்கையைப் பார் அதிசந்தோஷமே
எதற்கும் சுதந்திரம், உல்லாசமே
ஜலஸா ஹைலஸா ... ஹை
[படகே]

(4) கோரஸ்

விருத்தம் :

ஆண்டவன் படைப்பிலே
யாவரும் சமமே இவ்வுலகிலே.

**பாட்டு :**

லல்ல லால, லல்ல லால, லல்லலால லல்லலா.
எதுமே, இன்பமே அன்பாகுமே
எல்லோரும் நாமே, ஓர் குலம். (ல)

**விருத்தம் :**

நாளை நடப்பதை யாருமே அறியார்
வருவதை எதிர்த்து, நிற்பதே நம் கடமை.

**பாட்டு :**

எதுமே இன்பமே அன்பாகுமே
எல்லோரும் நாமே, ஓர் குலம். (ல)

**விருத்தம் :**

வேலை நாம் தேட, நாளது ஓடி
மறைந்திடு மே யென
நமக்கந்த பயமில்லையே.

**பாட்டு :**

உண்மையாக ஒன்றுகூடி
உலகில் நாமும் வாழுவோம்.
லல்ல லால, லல்ல லால, லல்லலால, லல்லலா.

## (5) (பாரதியார் பாடல்)

*ராதா :*

**பல்லவி**

ஜெயமுண்டு பயமில்லை மனமே : இந்த
ஜென்மத்திலே விடுதலை உண்டு
நிலையுண்டு. (ஜெ)

**அநுபல்லவி**

பயனுண்டு பக்தியினாலே—நெஞ்சில்
பதிவுற்ற குலசக்தி
சிறனுண்டு பகை இல்லை. (ஜெ)

சரணம்

அலைபட்ட கடலுக்கு மேலே : சக்தி
அருளென்னும் தோணியி னூலே
தொலையெட்டி கறையுற்றுத்
துயரற்று விடுபட்டுத் துணிவுற்ற
குலசக்தி சரணத்தில் முடிதொட்டு. (ஜெ)

(6) விருத்தம் :

விதியோ பைங்கிளி
கூண்டதனைப் பிரிவதோ மாதே.

பாட்டு :

சிறகு வந்ததும் சிறு கிளியே நீ
மறைவதோ வானில் ஆ ஆ
மறைவதோ வானில்
மின்னலைக் கண்டதும்
விதைப்பதோ ஆ
வீணாய்ப் போகாதே. (சிற)

சோகமும் நீங்காதே வரும்நாளே
இருள்கள் மூடும் உன் வாழ்வில்
மண மது வீசும் மலர்கள்வாடும்
பேதையும் ஆகாதே (சிற)

(7) கோரஸ்

பல்லவி

அ-நல்திருவோணம் வருதே
நல்திருவோணம். (அ-ந)

அநுபல்லவி

... ... ...
எங்கும் இன்பமதாய்
வந்துதித்த நல்திருவோணம். (ந)

**சரணங்கள்**

சோதரரே யாவருக்கும் சொல்லிடுவீரே —சுப
சோபனங்கள் பாடிடுவோம் வந்திடுவீரே
சுரதாள மதுமபகரி, தாதிமிதாதி, (ந)

அ, மோகனமாக ஊர்களெங்கினுமே
வந்தார் மாபலி மன்னன், வந்தார் மாபலிமன்னன்
ஓ-சோதரி இனியதாய்
பார் மாபலி வருகையால்
ஜோரான நாளிதுவே
ஜோரான நாளிதுவே (அ)
ஆகா, பாரிலே, ஆகா பாரிலே
மணமே வீசுது மலரே
மணமே வீசுது மலரே. (அ)
பேர், இன்ப நாளிது தானே
ஆ, மாபலி மன்னரும் வந்தார்.
வாராய் நீ
வாராய் நீ சுகமே
ஆண்டாண்டிதுபோல்
வாழ்வோம் நாமே
நாமே உலகினிலே. (ந)

(8) **விருத்தம் :**

வேதனையால் கண் கலங்கிட லாமோ
வெட்ட வெளியாம் இங்கினி தாயே
இவ்வுலகிலே துக்கமே
வாழ்வு துக்கமே
பாலூட்டியே தாலாட்டிநீ
வளர்த்தாய் இன்றே,
உனைப்பிரிய விதிவழியாம்
பெண்ணாய்ப் பிறந்தவள்
கண்ணீர் வடிப்பதே
பிறவிக் குணமே வாராய்.

**பாட்டு :**

ஆணாய்ப் பிறந்து வீணாய்த்
துயரம் கொள்வதோ
நீயே கொள்வதோ (ஆ)
திரைகடலோடியுந் திரவியந் தேடு
சிறந்த தாயை மறந்திடாதே,
... ... ... ...
... ... ... ... (ஆ)

(9) **விருத்தம் :**

உடமையும் வறுமையும் ஒருவழி நில்லா நில்லா. (உ)

**பாட்டு :**

உருளும் சக்கரம் போலே பொருளும்
உருண்டோடி வருமே மனமே
உருணடோடி வருமே, (உ)

**விருத்தம் :**

குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்தோர் ஊர் நண்ணினும் நண்ணுவர், ()

**பாட்டு :**

பட்டம்பதவி பணமும் உலகில் நிலையா,
பட்டம்பதவி பணமும் உலகில்
விட்டே போகுமே மூட்டாளே. (ப)

**விருத்தம் :**

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை
பிறந்து மண் மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இல்லை. (பி)

**பாட்டு :**

பிறக்கும்பொழுது கொண்டுவந்தாயே
இறக்கும்பொழுது கொண்டுபோவாயோ
உடமையும் வறுமையும்
ஒருவழி நில்லா நில்லா நில்லா. (பி)

(10) கேசவன் :

ரோட்டு மேலே மோட்டாரு வண்டிகள் போட்டி போட்டு ஓடும் ஹை
க்கோர்ட்டு ஸெண்டரில் சைனாபஜாரில் கூட்டமெல்லாம் கூடும்

போக்குவரத்துக்கு போலீஸ் கைகாட்டும்
போக்கிரிப் பயல்களை லாக்கப்பில் மாட்டும்
பாய்க்கடை, பூவுக்கடை, நகைக்கடை, துணிக்கடை
பழக்கடை, காப்பிக்கடை, ஆயிரம்கடை
பாத்திரக்கடை, இரும்பு சூத்திரக்கடை. சங்கீத
வாத்தியக்கடை மருந்து மாத்திரைக்கடை
ஷாப்புக்கடை கண்ணாடிக் கிருப்புக்கடை சலவைகள்
தேப்புக்கடை மலிஞ்சது சீப்புக்கடைக
ஓங்கிடும் பீச்சு மாலை நேரத்தில் உல்லாசக்காற்றோட்டம் —அங்கே

பாங்குடன் புதுபுது காதலர் விஜயம் பார்க்கலாம் எதேஷ்டம்

பஞ்சாபுச் சடையும் பைஜாம உடையும்
அஞ்சாத நடையும் ஆங்கிலப் பிடியும்
ஜிலுகு ஜிலுகு ஜெஞ்ஜிலுகு ஜிலுகு ஜெஞ்ஜிலுக்கு ஜிமிக்கி வேலை

ஜொலிகு ஜொலிகு ஜெஞ்ஜொலிகு ஜொலிகு ஜெஞ் ஜொலிக்கு சிலுகுசேலே

குமுகு குமுகும் குமுகு குமுகுகும் குமுகுகுமுகு வாஸம் வீசும்

குமுகு குமுகுகும் குமுகு குமுகுகும் குமுகுகுமுகு வாஸம்
டபகு டபகு நடை டாக்கு டீக்கு உடை ஷோக்குக் கான வேஷம்

மாங்கா தேங்கா பட்டாணி சுண்டல்
மல்லாக்கொட்டை முறுக்கு பொல்லாச் சுண்டல்

டிராமா ஸினிமா சரிகம க்கச்சேரி குத்துச்சண்டெ கித்துச்
சண்ட அத்தனையும் பார்த்தே
கண்களில் கண்ட காக்ஷியெல்லாமென்
கனவிலும் மறவேனே—அடி
பெண்களில் எதிர்த்து பேசாம லிருக்குமென் பிரியமுள்ள
மானே - தேனே பிரியமுள்ள மானே—!

(11) மோகன்—சாரதா

மோகன் :

வருவாய் ஆசைக் கிளியே
குளிர்நில வானம் செல்லுவோம். (வ)

சாரதா :

வருவதா ஏழைநான் தானே
அபலைமீது காதலேன். (வ)
வாடும் பூவாய் இந்நாளினில்— இருள்
மூடினதே இவ்வாழ்விலே. (வ)

மோகன் :

இம், மண்ணில் தோன்றும் ஒரு
விண்ணின் வெண்ணிலா நீ, (வ)

சாரதா :

ஏன் பிறந்தேன் புவி மீதினிலே
பெண்ஜென்ம மேதுன்பம் உலகினிலே. (வ)

சாரதா :

கரு - மேகம் உள்மறைந்து
தோன்றும் வெண்ணிலா நீ
என் உயிர் ஜீவிதமே என்றும்
இன்பங் காண்போம். (வ)

**(12) விருத்தம் :**

*வாழ்விலும் தாழ்விலும் மாதாவே* (வா)

**பாட்டு :**

பல்லவி

*அணையாத்தீபமே உன் தியாக சேவை*
*அன்னையே என் அன்னையே.* (அ)

அநுபல்லவி

*இன்பத் தாய்தனை எங்கினி காண்பேன்*
*இவள்போலும் இனி காணேனே*
*இனியாரும் துணை காணேனே* நேற் (று)
*இருந்தாள் அன்று காணேனே.* (அ)

சரணம்

*உயிருள்ளளவும் மக்களின் ஆசை*
*உழைத்தே தினமும் வளர்த்தாயே ; உன்*
*பெருமை என் சொல்வேன் மாதாவே : நாம்*
*போற்றுந் தெய்வம் மாதாவே*
*அம்மா என் அம்மா. அம்மா.* (உ)

---

சாந்தி பிரஸ் சென்னை-1.

